**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.49/2022- DW-1**

| | |
|---|---|
| Name | திரு.சேர்மராஜன் |
| Father Name | திரு.கணேசன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **02.02.2026.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

வாதி இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியும். எனக்கு சொந்தமான சொத்து குறித்து வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதியிடம் நான் வாங்கிய கடன் ரூ.10 லட்சத்திற்கு அவர் அடமானப்பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டுமென என்னிடம் கேட்டு கையெழுத்து வாங்கினார். அந்த பத்திரம் என்ன பத்திரம் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்தை வாதி என்னிடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து போட சொன்னதால் நான் அந்த கையெழுத்தை போட்டேன். சார்பதிவாளர் அலுவலகத்தில் என்னுடைய புகைப்படம் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி எனக்கு ரூ.10 லட்சத்தை வாதி வங்கி வரைவு காசோலை மூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ரூ.10 லட்சத்தை நான் ஏற்கனவே IDFC வங்கியில் வாங்கிய கடனுக்காக நான் வாதியிடம் பெற்றேன். வாதியிடம் வாங்கிய ரூ.10 லட்சத்தில் பல தவணைகளில் மொத்தம் ரூ.5லட்சத்தை அவரிடம் திரும்ப செலுத்திவிட்டேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி எனக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன். அந்த அறிவிப்பிற்கு நான் என் வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் வாதியிடம் அடமானக்கடன் பெற்றதாகவோ, அந்த கடன் தொகையை திரும்ப செலுத்திவிட்டதாகவோ நான் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. வாதியும், அவரது கணவரும் எங்கள் வீட்டிற்கு பலமுறை வந்து வழக்கு சொத்திற்கு பாக்கி கிரையத் தொகையை பெற்றுக்கொண்டு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்குமாறு கேட்டார்கள் என்றால் சரிதான். வாதி எனக்கு கடன் கொடுத்த பிறகு சொத்தை எழுதி தர கேட்டார். வாதியிடம் கடன் தான் பெற்றதாகவும், சொத்தை கிரையம் செய்து கொடுக்க ஒப்புக்கொள்ளவில்லை என்றும், நான் வாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் வாய்மொழியாக பலமுறை

சொல்லியிருக்கிறேன். நான் வாய்மொழியாக வாதியிடம் கிரைய ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என சொன்னதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், வாதி கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க கேட்ட போதெல்லாம் நான் கால அவகாசம் கேட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து ரூ.1 கோடி மதிப்பு உடையது என்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சில நபர்கள் அந்த சொத்தை ரூ.1 கோடி வரை விலைக்கு கேட்டு நாங்கள் மறுத்துவிட்டோம். வழக்கு சொத்து ரூ.1 கோடி மதிப்புடையது என நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்பந்த தேதியில் வழக்கு சொத்தின் மதிப்பு ரூ.17 லட்சம் மட்டுமே என்றாலும், வழக்கிற்காக சொத்தின் மதிப்பு ரூ.1கோடி என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை. வாதிக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க கூடாது என்பதற்காகவும், அவரை ஏமாற்றுவதற்காகவும் பொய்யாக வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.